**SC – 62 of 2024**

Date : 16.09.2025

அ.சா.1 : ராஜா ராம்

அ.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

எனக்கும் ஆஜர் எதிரிக்கும் எத்தனை வருடங்களாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் 2013 ம் வருடம் முதல் இருந்து வந்தது. போலிஸ் விசாரணை எதுவும் செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். விசாரணையின் போது சொத்து எனக்கு பாத்தியப்பட்டதாக கண்டு ஆவணங்கள் ஏதும் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்தேன் என்றால் என் அப்பா எனக்கு எழுதி கொடுத்த நன்கொடை ஆவணம் மற்றும் அது சம்மந்தமாக சில இரசீதுகள் ஒப்படைத்தேன். மேற்படி ஆவணங்கள் பற்றிய விவரம் போலிஸ் விசாரரணையில் துலங்குமா என்றால் துலங்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் சர்வே எண்.409/1 என்பதாகும். மேற்படி சர்வே எண் படலையார் குளம் கிராமத்தை சார்ந்தது என்றால் சரிதான். அதில் எவ்வளவு இடம் உள்ளது என்றால் சுமார் 58 செண்டு வரும் என்று நினைக்கிறேன் சரியாக எனக்கு நியாபகம் இல்லை. நான் கொடுத்த புகாரில் எவ்வளவு இடம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகாரில் செண்டு 58 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை. சொத்து என் அப்பாவிற்கு எப்படி பாத்தியம் என்பது குறித்து நான் குறிப்பிடவில்லை என்றால் பூர்வீகம் என்று குறிப்பிட்டுள்ளேன். எனது புகார் மனுவில் 30 வருடங்களுக்கு முன்பாக காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுள்ளது என்று நான் குறிப்பிட்டுள்ளதில் அது முதல் விசாரணை செய்யப்பட்ட காலத்தில் இருந்து 30 வருடத்திற்கு முன்பா அல்லது சம்பவ காலத்தில் இருந்து 30 வருடகாலத்திற்கு முன்பா என்றால் சம்பவ காலத்தில் இருந்து 30 வருடகாலத்திற்கு முன்பாகும். சம்பவ காலத்தில் இருந்து 30 வருடகாலத்திற்கு முன்பு என்றால் சுமார் 1983 க்கு முன்பா என்றால் முன்பாக இருக்கும். 1983 ல் எனக்கு வயது என்ன என்றால் தற்போது எனக்கு 50 வயது ஆகிறது. அதனால் மேற்படி காலகட்டத்தில் யார் காம்பவுண்ட் சுவர் கட்டினார் என்பது எனக்கு தெரியாது என்றால் என் தகப்பனார் சொல்லி தெரியும். 1983 ம் வரும் ஹாலோபிளாக் செங்கல்

பழக்கத்தில் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 30 வருடத்திற்கு முன்பாக கட்டப்பட்ட சுவரை இடித்துவிட்டதாக சொல்லிதான் எதிரி மீது நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் சுவரின் நீளம், அகலம் பற்றி குறிப்புகள் கொடுக்கவில்லை என்றால் நியாபகம் இல்லை. மேற்படி சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் கீழ் பக்கம் எனக்கு சொந்தமாக சா மில் உள்ளது என்றால் சரிதான். அந்த இடமும் என் அப்பா பெயரில் உள்ளது என்றால் தற்போது என் பெயரில் உள்ளது. அந்த இடத்தின் சர்வே எண்.409/2, 409/3, 409 - 4A என்பதாகும். எனக்கு பாத்தியப்பட்ட சாமில்லின் தென்பக்கம் காம்பவுண்ட் சுவர் இருக்கிறதா என்றால் உள்ளது. அந்த காம்பவுண்ட் சுவர் இடிக்கப்படவில்லை என்றால் இடிக்கப்படவில்லை. சம்பவம் நடந்த பொழுது எத்தனை பேர் கூடியிருந்தார்கள் என்றால் என் உடன் 2 பேர்கள் இருந்தார்கள். எதிரியும் உடன் வந்த 5 பேரும் ஆயுதங்கள் வைத்திருந்தார்களா என்றால் 2,3 பேர் கடப்பாறை கம்பி வைத்திருந்தார்கள் காம்பவுண்ட் சுவர் இடிக்கும் போது நான் தடுத்தேனா என்றால் தடுத்தேன். எனக்கு அதனால் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. போலிஸ் விசாரணையில் எதிரியுடன் வந்த நபர்கள் குறித்த விவரத்தை கூறினேனா என்றால் கூறினேன். வழக்கு சம்பவத்திற்கு முன்பாக தாவா சொத்து சம்மந்தமாக நான் மோசடியாக ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாக கண்டு என் மீது களக்காடு காவல் நிலையத்தில் 08.02.2013 ம் தேதியில் குற்ற எண்.46/2013 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் விசாரணையில் அது பொய் என சொல்லப்பட்டது. இதே சொத்து சம்மந்தமாக சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் OS 69/2013 வழக்கு தாக்கல் செய்தேன். அது இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி OS 180/2024 என நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 2013 ம் காலத்தில் புல எண்.409/ 1 சொத்தின் பட்டா எதிரி பாலகிருஷ்ணனின் தகப்பனார் ஆழ்வார் கோனர் என்பரின் பெயரில் இருந்தது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள உரிமையில் வழக்கில் 53 செண்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியாக நியாபகம் இல்லை. புல எண்.409/1 எதிரியின் தகப்பனார் ஆழ்வார் கோனாரின் பெயரில் இருந்து தற்போது எதிரியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. 2000 ம் வருடத்தில் காம்பவுண்ட் சுவர் எதிரியால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சிவில் வழக்கிற்கு எதிரி ஒரு பதில் போட்டுள்ளதை நான் தெரிந்து கொண்டேனா என்றால்

நியாபகம் இல்லை. மேற்படி பதிலிலும் மேற்படி சொத்தில் உள்ள காம்பவுண்ட் சுவர் எதிரியால் கட்டப்பட்டது என்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நியாபகம் இல்லை. என் புகார் மனு, முதல் தகவல் அறிக்கையில் சேதம் அடைந்த சொத்தின் மதிப்பு ரூ.3 ஆயிரம் என்று உத்தேசமாக சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரியின் மீது உள்ள சொத்து சம்மந்தமாக முன்விரோதத்தால் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் தெரிவித்துள்ள சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை எ ன்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் பட்டா இடத்தில் வைத்து நடந்தது என்றால் அவர்கள் வெளியில் இருந்து இடித்தார்கள் நான் உள்ளே நின்று கொண்டிருந்தேன். நான் சா மில் இருந்த இடத்தில் இருந்தேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்தின் உள்ளே நின்று கொண்டிருந்தேன். நான் கொடுத்த புகார் மனுவில் சாட்சியாக குறிப்பிட்டுள்ள நபர்களின் பெயர்கள் பின் யோசனையின் படி திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.